## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 7, 2017

**1. எந்த நிறுவனம், இந்திய கிரிக்கெட்டின் புதிய அணி ஸ்பான்சராக(Team sponsor) மாறியுள்ளது ?**

A. Oppo
B. Star India
C. Reliance
D. Vodafone

**விடை: A. Oppo**

மொபைல் உற்பத்தி நிறுவனமான Oppo மொபைல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், 5 ஆண்டுகளுக்கு இந்திய கிரிக்கெட்டின் புதிய அணி ஸ்பான்சராக(Team sponsor) மாறியுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துடன் (பிசிசிஐ) இணைந்து, ஏப்ரல் 2017 முதல் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு Oppo நிறுவனம் பணியாற்றும். அணி ஸ்பான்சர் நிறுவனத்தின் வணிக லோகோவானது, ஆண் மற்றும் பெண் வீரர்களின் விளையாட்டு உபகரணங்களில் இடம் பெற்றிருக்கும். பெரிய ஒளிபரப்பு நிறுவனமான ஸ்டார் இந்தியாவின் பதவிக்காலம் மார்ச் 2017-இல் காலாவதியாவதை அடுத்து அந்த இடத்தை Oppo நிறுவனம் நிரப்புகிறது.

**2. உலகளாவிய மதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச்(Fitch), நிதியாண்டு-17 (FY17)-இல் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வளவு இருக்கும் என கணித்துள்ளது ?**

A. 7.2%
B. 7.1%
C. 7.3%
D. 7.4%

**விடை: B. 7.1%**

உலகளாவிய மதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச்(Fitch), இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி நிதியாண்டு-17 (FY17)-இல் 7.1 % எனவும், நிதியாண்டு

2017-18 மற்றும் நிதியாண்டு 2018-19 ஆகிய இரண்டிலும் 7.7% எனவும் கணித்துள்ளது. ஒரே இரவில் புழக்கத்திலிருந்த 86% பணத்தை அரசாங்கம் அகற்றியதனால் ஏற்பட்ட பணப் பற்றாக்குறை, பொருளாதார நடவடிக்கையை பலமாக தாக்கியதை டிசம்பர் காலாண்டு GDP எண்கள் குறிப்பிடுகின்றன என்று பிட்ச் கூறுகிறது. இது, இந்தியாவின் தற்போதைய வட்டி விகிதமான 6.25% அளவில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. இந்த நிதியாண்டில் ஃபிட்ச்சின் திட்ட வளர்ச்சியானது, உலகளாவிய சிந்தனைக்குழு அமைப்பான Organisation for Economic Co-operation and Development (OECD)-ன் மதிப்பீடுகள் வரிசையில் உள்ளது.

**3. "Al Nagah-II" கூட்டு இராணுவப்பயிற்சியின் 2-வது பதிப்பு, இந்தியாவிற்கும் எந்த நாட்டுக்கும் இடையே தொடங்கியது ?**

A. இஸ்ரேல்
B. ஆப்கானிஸ்தான்
C. ஓமன்
D. கிர்கிஸ்தான்

**விடை: C. ஓமன்**

"Al Nagah-II" கூட்டு இராணுவப்பயிற்சியின் 2-வது பதிப்பு, இந்தியாவிற்கும் ஓமன் நாட்டுக்கும் இடையே மார்ச் 6, 2017 அன்று இமாச்சல பிரதேசத்தின் Bakloh-இல் உள்ள Dhauladhar மலைத்தொடரில் தொடங்கியது. 14 நாள் பயிற்சியின் நோக்கம், இந்திய இராணுவம் மற்றும் ஓமன் ராயல் இராணுவத்திற்கும் இடையே திறமை மற்றும் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளும் போது இருதரப்பு இராணுவ- இராணுவ உறவுகளை வளர்ப்பது மற்றும் Inter-operability-யை அதிகரிப்பது ஆகும். இப்பயிற்சி குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் வன போரில் கவனம் செலுத்துகிறது. இரு நாடுகளில் இருந்தும் சுமார் 60 பட்டாளங்கள் பயிற்சியில் பங்கேற்கின்றன.

**4. எந்த நகரம், "ICEGOV 2017" மின்-ஆளுமை பற்றிய சர்வதேச மாநாட்டை நடத்துகிறது ?**

A. ஜெய்ப்பூர்
B. லக்னோ

C. கவுகாத்தி
D. புது தில்லி

**விடை: D. புது தில்லி**

கோட்பாடு மற்றும் மின்னணு ஆளுமை நடைமுறை பற்றிய சர்வதேச மாநாட்டின் (International Conference on Theory and Practice of Electronic Governance) 10-வது பதிப்பு “Building knowledge Societies: From Digital Government to Digital Empowerment” என்ற மையக்கருவுடன், புது தில்லியில் மார்ச் 7, 2017 அன்று தொடங்கியது. அரசாங்கத்திற்கும் அதன் குடிமக்கள், தொழிலகங்கள், சிவில் சமூகத்திற்கும் இடையே உள்ள உறவை மாற்றுவதில் தொழில்நுட்பத்தின் பங்கு பற்றி இம்மாநாடு விவாதிக்கும். . ICEGOV 2017-ன் பிரதான நோக்கமானது, டிஜிட்டல் அதிகாரமளித்தலை உள்ளூர் மொழிகள் மூலம் டிஜிட்டல் அரசாங்கம் எப்படி ஏற்படுத்தும் என்பதை ஆராய்வதே ஆகும். சர்வதேச அளவில் கவனத்தை பெற்ற டிஜிட்டல் இந்தியா உந்துதலின் மூலம், பெரும் சைபர் சக்தியாக வளர்ந்து வரும் இந்தியாவிற்கான அங்கீகாரமாக இது உள்ளது. 3 நாள் மாநாட்டை, ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் மற்றும் யுனெஸ்கோவுடன் இணைந்து எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்ப (MeitY) அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. மத்திய மின்னணு மற்றும் IT, சட்டம் மற்றும் நீதி அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் இதனை தொடங்கி வைத்தார்.

**5. சமீபத்தில், முன்னாள் மக்களவை சபாநாயகர் ராபி ரே(Rabi Ray) மறைந்தார். இவர் பின்வரும் எந்த மாநிலத்தை சேர்ந்தவர் ?**

A. ஒடிசா
B. அசாம்
C. மணிப்பூர்
D. திரிபுரா

**விடை: A. ஒடிசா**

குறிப்பிடத்தக்க சோசலிச தலைவரும் முன்னாள் மக்களவை சபாநாயகருமான ராபி ரே(91) சமீபத்தில் ஒடிசாவின் கட்டாக்கில் காலமானார். 1979 ஜனவரி முதல் 1980 ஆம் ஆண்டு ஜனவரி வரை மொரார்ஜி தேசாயின் அமைச்சரவையில் சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சராகவும்,

1989-1991 வரை 9-வது மக்களவை சபாநாயகராகவும் இவர் இருந்தார். 1991 ஆம் ஆண்டு ஒடிசாவின் கேந்தரபடாவில் இருந்து மீண்டும் 10-வது மக்களவைக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இவர், காமன்வெல்த் பேச்சாளர்கள் அமைப்பின் முன்னாள் தலைவர் ஆவார்.

**6. "சூர்யா கிரண்-XI" இந்தோ-நேபாள இராணுவ பயிற்சியின் 11-வது பதிப்பு, எந்த மாநிலத்தில் தொடங்கியது ?**

A. ஜார்க்கண்ட்
B. உத்தரகண்ட்
C. குஜராத்
D. ராஜஸ்தான்

**விடை: B. உத்தரகண்ட்**

"சூர்யா கிரண்-XI" கூட்டு இராணுவ பயிற்சியின் 11-வது பதிப்பு, உத்தரகண்ட்டில் உள்ள பித்தோராகர் பகுதியில் இந்தியா மற்றும் நேபாளத்திற்கு இடையே மார்ச் 7, 2017 அன்று தொடங்கியது. இது இரண்டு இராணுவங்களுக்கு இடையே ஒரு படைப்பிரிவை நிலை கூட்டுப்பயிற்சியாகும். இரண்டு வார நீண்ட பயிற்சியின் நோக்கம், கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கை போன்ற பல்வேறு பகுதிகளில் இரு படைகளுக்கும் நீண்ட காலத்திற்கு பயிற்சி அளிப்பதாகும். மனிதாபிமான உதவி, நிவாரணப் பணிகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற மற்ற முக்கிய அம்சங்களிலும் இது கவனம் செலுத்தும். பயிற்சியின்போது இரண்டு இராணுவங்களும் பல்வேறு அனுபவங்களை பெறுவதன் மூலம் ஒருவருக்கொருவர் பயனடைவர். இந்திய ஆயுதப் படைகளானது, நட்பு நாடுகளுடன் மேற்கொள்ளும் தொடர் கூட்டு பயிற்சியின் ஒரு பகுதியாக இது உ ள்ளது.

**7. "Numbers Do Lie: 61 Hidden Cricket Stories" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. கிரெக் சாப்பல்
B. சுரேஷ் மேனன்
C. பங்கஜ் மிஸ்ரா
D. ஆகாஷ் சோப்ரா

**விடை: D. ஆகாஷ் சோப்ரா**

"Numbers Do Lie: 61 Hidden Cricket Stories" என்ற புத்தகத்தை, அனைத்து கதைகளும் உண்மையாகவும் மற்றும் புள்ளியியல் ஆதரவுடன் இருக்கும் வகையில் Impact Index is a statistical system-வுடன் இணைத்து முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் ஆகாஷ் சோப்ரா எழுதியுள்ளார். இப்புதிய புத்தகம், கிரிக்கெட் பற்றி மிகப்பெரிய கிரிக்கெட் ரசிகருக்கு கூட தெரியாத உண்மைகளை கொண்டுள்ளது. ஒரு பெரிய நட்சத்திரத்தை பார்த்து, அவர்களின் வழக்கமான வாசிப்பை அதிகப்படுத்துதல் மற்றும் அவர்களை மறுவரையறை செய்வதற்கான ஒரு சவால் முயற்சியாக இப்புத்தகம் உள்ளது. Impact Index என்பது ஒரு புள்ளிவிவர அமைப்பு, இது கிரிக்கெட் போட்டி மற்றும் தொடர் சூழலில் ஒவ்வொரு செயல்திறனையும் ஆராய்கிறது. இப்புத்தகம், 7 ஆண்டு கால Impact Index வேலையை ஒருங்கிணைக்கிறது. புத்தகத்திற்கு புள்ளிவிவர உண்மைகள் ஆதரவாக உள்ளன.

**8. 2017 ஏடிபி மெக்ஸிக்கோ ஓபன் கடின மைதான(ATP Mexico Open hard court) டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றுள்ளவர் யார் ?**

A. நோவக் ஜோகோவிக்
B. ரோஜர் பெடரர்
C. சாம் கியூர்ரே
D. ரபேல் நடால்

**விடை: C. சாம் கியூர்ரே**

அமெரிக்க தொழில்முறை டென்னிஸ் வீரர் சாம் கியூர்ரே, மெக்ஸிக்கோவின் அகாபுல்கோவில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ர:ஃபேல் நடாலை 6-3, 7-6 என்ற புள்ளிகளில் தோற்கடித்து 2017 ஏடிபி மெக்ஸிக்கோ ஓபன் கடின மைதான(ATP Mexico Open hard court) டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.

**9. டைம்ஸ் உயர் கல்வியின் 2017 உலகின் சிறந்த சிறிய பல்கலைக்கழகங்கள் பட்டியலில், முதல் 10 இடத்தில் இடம் பெற்றுள்ள இந்திய பல்கலைக்கழகம் எது ?**

A. இந்திய அறிவியல் கழகம் (IISc), பெங்களூரு
B. இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT), கவுகாத்தி
C. சாவித்ரிபாயி பூலே புனே பல்கலைக்கழகம்
D. இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT ), பாம்பே

**விடை: A. இந்திய அறிவியல் கழகம் (IISc), பெங்களூரு**

டைம்ஸ் உயர் கல்வியின் 2017 உலகின் சிறந்த சிறிய பல்கலைக்கழகங்கள் பட்டியலில், முதல் 10 இடங்களில் 8-வது இடத்தில் இந்திய அறிவியல் கழகம் (IISc), பெங்களூரு உள்ளது. பட்டியலில் முதலிடத்தில் கலிபோர்னியா இன்ஸ்டிடியூட் ஆ்ப் டெக்னாலஜி (கால்டெக்கின்) (அமெரிக்கா) உள்ளது, அதனை தொடர்ந்து Ecole Normale Superrieure (France), Pohang University of Science and Technology (POSTECH) (South Korea) மற்றும் Ecole Polytechnique (France) ஆகியவை உள்ளன. டைம்ஸ் உயர் கல்வி படி, சிறந்த சிறிய பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் இடம் பெறுவதற்கு பின்வரும் தகுதிகளை கொண்டிருக்க வேண்டும்: டைம்ஸ் உயர் கல்வி உலக பல்கலைக்கழக 2016-17 தரவரிசையில் கல்வி நிறுவனம் இடம் பெற்றிருக்க வேண்டும், குறைந்தது நான்கு பாடங்களையாவது கற்பிக்க வேண்டும் மற்றும் 5,000-ற்கும் குறைவான மாணவர்கள் இருத்தல் வேண்டும். சிறிய பல்கலைக்கழகங்களும் உயர்ந்த மாணவர் திருப்தி, மாணவர்கள் மற்றும் அவர்களின் பேராசிரியர்கள் இடையே நல்ல உறவுகளை வழங்கும் என்பதை 2017 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த சிறிய பல்கலைக்கழகங்கள் அடிகோடிட்டு காட்டுகின்றன.

**10. எந்த மாநில அரசு, மூத்த குடிமக்களுக்கு "தீர்த்த தர்ஷன்(Tirtha Darshan)" திட்டத்தை தொடங்கியுள்ளது ?**

A. மத்தியப் பிரதேசம்
B. ஹரியானா
C. ராஜஸ்தான்
D. கேரளா

**விடை: B. ஹரியானா**

சமீபத்தில் ஹரியானா அரசு, மூத்த குடிமக்களுக்கு "தீர்த்த தர்ஷன்(Tirtha Darshan)" திட்டத்தை தொடங்கியுள்ளது. திட்டத்தின்படி, ஹரியானாவில்

வசிக்கும் 60 வயதுக்கு மேல் உள்ள மூத்த குடிமக்கள் அரசு செலவில் நாட்டிற்குள் புனித யாத்திரை செல்ல முடியும். இத்திட்டத்தின் கீழ், வறுமை கோட்டிற்கு (BPL) கீழுள்ள குடும்பங்களை சேர்ந்த மூத்த குடிமக்களின் சுற்றுப்பயணத்தின் முழு செலவையும் அரசு ஏற்றுக்கொள்ளும் .மூத்த குடிமக்கள் குலுக்கல் அடிப்படையில் யாத்திரைக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். 400 க்கும் மேற்பட்ட இடங்களுக்கு திட்டத்தின் கீழ் விஜயம் செய்ய முடியும்.